[illegible] ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

மலர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 16 திங்கட்கிழமை (01-11-1993) UTHAYAN A Lively National Tamil Daily இதழ் 338

# கொழும்பில் தமிழர்களுக்கு எதிராக செயற்பட தனிப்படை அமைப்பு!

## ஜே.வி.பியை அடக்கியதைப் போன்று நடவடிக்கை எடுப்பதற்குத் திட்டம்

கொழும்பு, நவம்பர் 1

கொழும்பில் தமிழர்களை கடத்துவதிலும், கடத்திச் செல்பவர்களை கொலை செய்வதிலும் விசேட படைப் பிரிவு ஒன்று செயற்பட்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜே. வி பியினரை அடக்கியதைப் போன்ற பாணியில் இந்தப் படைப்பிரிவு செயற்படத் தொடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மற்றும் தென் பகுதியில் உள்ள தமிழர்களை பயமுறுத்தும் ஒரு நடவடிக்கையாக ஸ்ரீலங்கா, படைத்துறை தலைமை இவ்வாறான விசேட படைப்பிரிவை அமைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அனுராவுக்கு அமைச்சர் பதவி அரசு ஆராய்கிறது

கடந்த வெள்ளிக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்து கொண்ட அனுரா பண்டாரநாயக்காவுக்கு அந்தரங்க அமைச்சர் பதவி ஒன்றை வழங்குவது குறித்து அரசு ஆராய்ந்து வருவதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இதுவரை காலமும் சுதந்திரக் கட்சியின் எம். பியாக இருந்து வந்த அனுரா பண்டாரநாயக்கா, அக்கட்சியை விட்டு இராஜினாமாச் செய்ததை அடுத்து, எதிர்வரும் 11 ஆம் திகதியுடன் தமது எம். பி. பதவியை இழக்கிறார்.

ஐ.தே.கவின் எம் பி பதவி ஒன்றுக்கு வெற்றிடம் ஏற்பட்டு — எதிர்வரும் 11 ஆம் திகதிக்குப் பின் — அந்த இடத்துக்கு அனுரா நியமிக்கப்பட்டால் மட்டுமே எம். பியாகவும் அதைத் தொடர்ந்து அமைச்சராகவும் அனுரா சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-எ)

## குடா நாட்டில் மேலும் பலருக்கு புதிதாக ஆசிரியர் நியமனம்

### விவரங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், நவ. 1

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவும் ஆசிரியர் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு மேலும் பலருக்கு நியமனம் வழங்கப்பட உள்ளது. இது குறித்த நாளை கொழும்பில் நடைபெறும் கல்விச் சேவை ஆணைக்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட உள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு வருமாறு யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரும் அழைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் விவரங்களைத் தமக்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு கல்வி

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஏழு கொம்புகளுடன் புராதன மட்கலசம்!

### நாகர்கோவிலில் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம், நவ. 1

மிகப் புராதனம் வாய்ந்ததெனக் கருதப்படும் மட்பாண்டம் ஒன்று நாகர்கோவில் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த மட்பாண்டம் சிதைவு எனினும் மூடியுடன் முழுமையான நிலையில் உடையாமல் உள்ளது. இதற்கு ஏழு கொம்புகள் உள்ளன.

நாகர்கோவில் பகுதியில் இருந்துத் தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியம் தொடர்பான தகவல்களை சேகரித்து வரும் ஆசிரியரான திரு. வி. கனகராசா இந்தப் புராதன மட்பாண்டத்தை மீட்டெடுத்தார். அதே ஊரைச் சேர்ந்த இமானுவேல் அருள்ஞானராஜன் என்ற மாணவனே இந்த மட்பாண்டத்தைக் கண்டு அடையாளம் கூறியிருந்தார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மடு ஐ. நா. தூதரகம் முன் அகதிகள் ஆர்ப்பாட்ட பேரணி

### மறியல் போராட்டமும் தொடர்கிறது

யாழ்ப்பாணம், நவ. 1

மன்னார்ப் பகுதி மடு அகதி முகாமைச் சேர்ந்த பலருக்கு உலர் உணவு நிவாரணம் திடீரென நிறுத்தப்பட்டதை கண்டித்து நேற்று முன்தினம் அங்குள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அலுவலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. அங்கு மறியல் போராட்டமும் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது.

3 ஆயிரத்து 500 க்கு மேற்பட்டவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

வவுனியா பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்து சென்று மடு அகதி முகாமில் தங்கியுள்ளவர்களுக்கே நிவாரணம் நிறுத்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## படகுச் சேவை இன்று இல்லை நாளை நடக்கும்

பூநகரி - கிளாலி படகுச் சேவை இன்று நடைபெற மாட்டாது என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் நேற்று அறிவித்தனர்.

அதற்குப் பதிலாக நாளையும் பின்னர் எதிர்வரும் 4 ஆம் திகதியும் 6 ஆம திகதியும் படகுச் சேவை நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## இராணுவச் செய்திகளை தணிக்கை செய்ய மறுப்பு

### தளபதியின் கோரிக்கை நிராகரிப்பு

கொழும்பு, நவ. 1

இராணுவ நடவடிக்கைகள் குறித்த கொழும்புப் பத்திரிகைகள் வெளியிடும் செய்திகளைத் தணிக்கை செய்ய இராணுவத்துக்கு அனுமதி தரவேண்டும் என்று தளபதி சிசில் வைத்தியரத்ன விடுத்த கோரிக்கையை அரசு நிராகரித்து விட்டது.

'சண்டே ரைம்ஸ்' இத்தகவலை நேற்று வெளியிட்டது.

கிளாலியைப் பிடிப்பதற்காக இராணுவம் மேற்கொண்ட "யாழ்தேவி" இராணுவ நடவடிக்கை படுதோல்வி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோதமாக நுழைந்த இலங்கையர்கள் உட்பட 62 பேர் ஜேர்மனில் கைது

பேர்லின், நவ. 1

ஜேர்மனுக்குள் சட்டவிரோதமாக வந்திருந்த 62 வெளிநாட்டவர்களை ஜேர்மனிய பொலிஸார் நெடுஞ்சாலை ஒன்றில் வைத்துக் கைது செய்தனர்.

இவர்களில் பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் இலங்கையைச் சேர்ந்தவர்களும் உள்ளனர்.

ரஷ்யா மற்றும் செக்கோஸ்லேவக்கியா வழியாக ஆசிய மக்கள் ஜேர்மனிக்குக் களவாக கொண்டுவரப்படுகின்றார்கள் என்று ஜேர்மன் செய்தி நிறுவனம் அறிவித்தது. (க-எ)

தமிழா !
காலம் எமது கைபிடித்து நடக்கிறது
ஞாலம் வியக்கும் தலைவன் வழிகாட்டி
வெற்றி வெகுதூரம் இல்லை
காலடியில் தான் இருக்கிறது
போராடுவோம் வா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மயானம் குறித்து யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளரான செ. கிருஷ்ணராசா இப்போது ஆய்வினை மேற்கொண்டுள்ளார். மயிலை சமும், பல்கலைக்கழகத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

நாவர் கோவில் கண்டு எடுக்கப்பட்ட மயானத்தினையும், ஆனைக்கோட்டையில் கடந்த வாரம் தாம் கண்டு எடுத்த மயானம் ஒன்றின் மாசத்தையும் திரு. கிருஷ்ணராசா ஒப்பீட்டு அடிப்படையில் இப்போது ஆய்வு செய்து வருகிறார்.

ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி இடுகாட்டின் அடித்தள மண்படையில் இருந்து தாம் மயானத்தின் பகுதியை எடுத்ததாக திரு. கிருஷ்ணராசா தெரிவித்தார்.

இவ்விரு மயானங்களுக் கான வரலாற்று முக்கியத் தினையும், ஒப்பீட்டு அடிப் படையிலான காலக் கணிப் பீட்டினை ஆராய்வதற்கு வழி பிறந்துள்ளது.

ஆனைக்கோட்டை இதுவரை பெருங்கற்கால பண்பாட்டு மரபுக்குரியது என்பது 1980 இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றுத் துறையினர் அங்கு மேற்கொண்ட அகழ்வின்போது தெரியவந் ததை குறிப்பிடத்தக்கது என் றும் திரு. கிருஷ்ணராசா தெரிவித்தார். (அ)

## புத்தூரில் இருவர் பலி

யாழ்ப்பாணம், நவ. 1

அடிகாயங்களுக்கு இலக்கா கிய ஒருவர் உயிரிழந்ததை அடுத்து இடம்பெற்ற அசம்பா விதத்தில் மற்றொருவரும் உயிரிழந்தார்.

புத்தூர் பகுதியில் இடம் பெற்ற இந்தச் சம்பவம் குறித்து கூறப்படுவதாவது:-

தலையில் வெந்த காயங் களுடன் கைநினைவிழந்து ஆபத்தான நிலையில் கடந்த 28 ஆம் திகதி இரவு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருந்த ஒருவர் நேற்று அதிகாலை மரணமானார்.

புத்தூர் மேற்கைச் சேர்ந்த

(5 ஆம் பக்கம் பார்க்க)

# ஒரே நாடாக விளங்க சமஷ்டி முறையே உதவும்

## ஜி. எல். பீரிஸ் தெரிவிப்பு

புதுடில்லி, நவ. 1

இலங்கை ஒரே நாடாக விளங்குவதற்கு சமஷ்டி அரச மைப்பு முறைதான் உதவும்.

கொழும்பு பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ஜி எல் பீரிஸ் முன்கண்டவாறு சொன்னார்.

இலங்கை – இந்திய நட்புற வுக் கழகம் நடத்திய காந்தி நினைவு தினக் கூட்டத்தில் பேசிய போது அவர் இத னைத் தெரிவித்தார்.

சமஷ்டி அரசமைப்பு முறையை அமுல் செய்வது பற்றி அனைவரும் தீவிரமாக சிந்திக்க வேண்டும் என் றும் அவர் கூறினார்.

சிறுபான்மையினர் கௌ ரவத்துடனும் உரிமைகளும் பெற்று வாழ சகிப்புத் தன் மையைக் கடைப் பிடிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (த-எ)

## மடு ஐ. நா. தூதரகம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த இந்த மக் களை மீண்டும் பழைய இடங் களுக்குச் செல்லுமாறு அரச கோரியுள்ளது. ஆனால் அவ ர்கள் அங்கு திரும்பிச் செல்ல மறுத்து வருகின்றனர்.

அகதி மக்கள் ஆர்ப்பாட் டத்தில் குதித்துள்ளதை அடுத்து முகாமில் இயங்கி வந்த பொது நிறுவனங்கள், அரச திணைக்களங்கள் மற் றும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

இதேசமயம் மடு முகாமில் உள்ள ஏனைய அகதிகளுக்கு உணவுப் பொருள்களை ஏற்றி வந்த அகதிகளுக்கான ஐ நா. தூதரக வாகனங்களை அகதி கள் சூழ்ந்து கொண்டு மறி யல் சடுபட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தக வல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களின் சுற்றிவளைப்பிக் குள் அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தைச் சேர்ந்த நால் வர் சிக்கியிருப்பதாகவும் அவர் களில் ஒருவர் பிரான்ஸைச் சேர்ந்த கிறிஸ்டிக் என்பவர் என்றும் ஏனையோர் இலங் கையர்கள் என்றும் தெரிவிக் கப்பட்டது.

இவர் அருகில் இருந்த மாதா கோயில் ஒன்றில் தஞ் சம் புகுந்திருப்பதாக பி. பி. ஸி. தெரிவித்தது. (ஒ-எ-6)


அரிய சந்தர்ப்பம்!

★ தீபாவளி மலிவு விற்பனை ★

நவம்பர் 1ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை

சகலவிதமான கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள் முதலியன மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

☆ அல்டி ☆

269/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(இ-6894)


## கொழும்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களைக் கடத்தியும், கடத்தப்பட்டவர்களைக் கொலை செய்தும் தமிழ்ப் பொதுமக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி, அவர்களை வலோற்காரமாகப் பலவந்தப் படுத்துவதே படைத்துறையி னின் நோக்கம் என்றும் சொல் லப்படுகிறது.

ஜே. வி. பியினர் என்ற சந் தேகத்தில் கண்டபடி சிங்கள இளைஞர்களைக் கொலை செய்து, தென்னிலங்கையில் நிர்வாகத்தை ஒழித்தது போன்று — தமிழர்களையும் வைமுறுத்த முடியும் என்று ஸ்ரீலங்கா அரச கருதுவதாக வும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்றில் குறிப்பிடப் பட்டுள்ளன. (ஓ)

## குடாநாட்டில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள் ஆணைக்குழுத் தலைவர் திரு. ஜோர்ஜ் மென் டிஸ் கல்விப் பணிப்பாளரைக் கேட்டிருக்கிறார்.

பின்வரும் விபரங்களை உட னடியாகத் தருமாறும் திரு. ஜோர்ஜ் மென்டிஸ் கேட்டிருக் கிறார்:-

★ 1992 – 93 இல் பட்ட தாரி பயிலுநர் ஆசிரியர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக் கப்பட்டு -

நியமனம் வழங்கப்படும் பத வியை ஏற்காதவர்கள்

1. 06. 93 க்கு முன்னர் பட் டதாரிகளானவர்களில் ஆசிரி யர் நியமனம் வழங்கப்படாத வர்கள்.

★ தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்கள்

ஆரம்ப ஆசிரியர்கள், விஞ் ஞான, கணித ஆசிரியர்கள் பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கையும் அவர்களில் பதவி ஏற்காதவர் களின் எண்ணிக்கையும் -


பதவி ஏற்காதவர்களின் இடங்களுக்கு பரீட்சைக்குத் தோற்றியவர்களில் ஜி சி. ஈ. உயர்தரத்தில் ஒரே தடவை யில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களின் விவரம்.

★ ஆங்கில ஆசிரியர்கள் இவ்வருடம் மார்ச் மாதத்தில் நடைபெற்ற ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கு பின்தங்கிய பகுதி களில் இருந்து தோற்றியவர் களின் விவரம்.

கல்விப் பணிப்பாளரிடம் இந்த விவரங்களைக் கேட்டு அனுப்பிய கடிதத்தின் பிரதி யாழ் அரச அதிபருக்கும் கிடைத்துள்ளது.

நாளை கொழும்பில் நடை பெறும் மாநாட்டில் வடக்கு - கிழக்கில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஆறாயிரம் பேரை நியமிப்பது குறித்த ... முடிவு ... ளலாம். (...)

# நெஞ்சை விட்டகலா ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

## தம்பிராசா மகேந்திரலிங்கம்

அன்னை மடியில்: 09 – 04 – 1968

அம்பிகை அடியில்: 12 – 11 – 1992

திதி 01 – 11 – 1993

பாதியிலே பறிக்கப்பட்ட பாசமலரே
நேசம் மிக்கவனே
எம் நினைவினில்
என்றும் வாழ்வாய்

உன் நினைவால் வாடும்
பாசமிகு
அப்பா, அம்மா, அக்கா,
அத்தான், அண்ணன்மார்,
அண்ணிமார், மருமக்கள்,
பெறாமக்கள், உறவினர்கள்.

பிருந்தாவனம்,
நீர்வேலி தெற்கு.
நீர்வேலி.

(87856)


# ROTARY GROUP STUDY EXCHANGE 1993/94

U. S. A. 9th April 94 — 14 th May 94

Applications are invited from outstanding young business, professional or self employed within the age group of 25 - 35 years to enable us to forward to the Rotary District Governor, Colombo for final selection.

The G S. E. programme of the Rotary foundation is an educational activity promoting International Understanding through travel and person to person contact The visit of the G. S E. team is to North Carolina. U, S. A. for a period of six weeks in April/May 94.

The team members will be provided with around trip air ticket to the U. S A. and will be hosted by Rotarians for their meals, lodging and group travel within the district. Team members will need to meet their personal and incidental expenses.

QUALIFICATIONS:

1) Age between 25 - 35 years
2) At least 2 years full time employment in recognised business or profession.
3) High proficiency in English (writing, reading and speaking)
4) Ability to speak at Rotary Clubs and organisation in the U. S. A. and Sri Lanka.

Application forms can be obtained from Rtn P. Selvanathan, President, Rotary Club of Jaffna. No. 7, Udaiyar Lane, Kandarmadam, Jaffna on payment of Rs: 100/- each. Application closing date: 03-11-93

– President, Rotary Club of Jaffna.

(இ/6808)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# பொய்க்கு ஒரு பதிலடி!

பிரிட்டனில் உள்ள அகதிகள் நலன் காக்கும் கவுன்ஸில், இலங்கை அகதிகள் சம்பந்தமாக வெளியிட்ட அறிக்கை இலங்கை அரசின் பொய்ப் பிரசாரங்களுக்கு பெரும் பதிலடியாக அமைந்துள்ளது.

அகதிகள் நலன் காக்கும் கவுன்ஸில், "இலங்கை அகதிகள் — ஒரு முடிவற்ற பயணம்" என்ற 66 பக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. தமிழர்கள் வெளிநாடுகளுக்கு அகதிகளாகச் சென்றதற்கு அரசு அவர்களுக்கு எதிராக நடத்திய வன்முறைகளே காரணம் என்பதை அந்த அறிக்கை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. 1956 ஆம் ஆண்டிலிருந்து அரசு தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்ட வன்செயல்கள், சிங்களக் குடியேற்றங்கள் என்பனவற்றை அந்த அறிக்கை விவரிக்கிறது.

வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள ஈழத்தமிழ் அகதிகள் அரசியல் அகதிகள் அல்லர். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்த நாடுகளுக்கு ஓடிய பொருளாதார அகதிகள். தங்கள் பொருளாதார மேம்பாட்டுக்காகச் சென்றவர்கள் என்றே இலங்கை அரசு வெளிநாடுகளில் பிரசாரம் செய்து வருகிறது.

ஈழத்தமிழ் இளைஞர்கள் முப்படைகளின் சித்திரவதை தாங்காமல் 1981ஆம் ஆண்டில் பெருவாரியாக அப்போதைய மேற்கு ஜேர்மனிக்கு அகதிகளாகச் சென்ற காலத்தில் இருந்தே அரசு இப்படி ஒரு படத்தையே வெளிநாடுகளுக்குக் காட்டி வருகிறது.

1983ஆம் ஆண்டுக் கொடூரத்தின் பின்னர் கூட அதே நிலைப்பாட்டையே கடைப்பிடித்தது. இப்போது— 1990ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் மீது யுத்தத்தைத் திணித்து— தமிழர்களைக் கங்குகரையின்றி இனஒழிப்புச் செய்யும் வேளையிலும் தமிழர்களைப் பொருளாதார அகதிகள் என்றே வெளி உலகத்துக்குக் காட்டுகிறது.

தனது பிரசார உத்தியினால், தமிழர்கள் நலன்கள் பாதுகாக்கப்படுவதாகவும், அவர்களின் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், வாழ்வுப் பாதுகாப்பு உண்டென்றும் வெளிநாடுகளை நம்பவைக்கிறது.

அதனாலேயே சுவிடன், சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, ஜேர்மனி, பிரிட்டன் போன்ற நாடுகள் ஈழத்தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கு முனைகின்றன.

பிறநாட்டு அகதிகளால் தமது பொருளாதாரம் சீரழிகிறது அல்லது தமது மக்களின் தொழில் வாய்ப்பு பாதிக்கப்படுகிறது அல்லது சமூகவியல் பிரச்சினைகள் தோன்றுகின்றன என்ற காரணங்களுக்காக ஐரோப்பிய நாடுகள் தமது குடியேற்றச் சட்டங்களை இறுக்குவது வேறு. அது விளங்கிக் கொள்ளக் கூடியதுமாகும்.

ஆனால் இலங்கை அரசு கூறுவது போன்ற பொய்களை நம்பி, மனிதாபிமானத்தின் அடிப்படையில் அகதிகளுக்குப் புகலிடம், தஞ்சம் அளிப்பது என்ற தமது கொள்கைகளை மாற்றுவது, அல்லது கைவிடுவது வருத்தத்துக்கு உரியது!

அகதிகள் நலன் காக்கும் கவுன்ஸிலின் அறிக்கை மேற்கு நாடுகளின் கண்களை திறக்க வேண்டும். தமிழ் அகதிகள் விடயத்தில் பரிவு காட்டுவதற்காக மட்டும் அந்த அறிக்கையின் கருத்தம்சத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்பதல்ல. தமிழர்கள் மீது இலங்கை அரசு கட்டவிழ்த்துவிடும் வன்செயல்களை நிறுத்துமாறு அழுத்தம் கொடுக்கும் கண்ணோட்டத்திலும் அந்த அறிக்கையை ஐரோப்பிய நாடுகள் ஆழமாக நோக்க வேண்டும்.

# புலிகளின் போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல; இராணுவத்துக்கு எதிரானதே!

## 'ராவய' செய்தியாளர் பி.பி.ஸி க்குப் பேட்டி

கொழும்பு, நவ. 1

விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் சிங்களப் பொதுமக்களுக்கு எதிரானவர்கள் அல்லர். அவர்கள் சிங்கள மக்களுக்கு எதிராகப் போராடவில்லை.

தமிழரின் பிரதேசத்துக்கு வந்து தமிழ் மக்களைத் துன்புறுத்தி, தமிழர் பிரதேசத்தில் குண்டுகளை வீசும் பாதுகாப்புப் படையினருக்கு எதிராகவே அவர்கள் போராடுகின்றனர்.

அண்மையில் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய "ராவய" பத்திரிகையின் செய்தியாளர் நந்தன வீரரத்னா பி.பி.ஸி. "சந்தேசிய" சேவைக்கு அளித்த செவ்வியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது:-

கிளாலி கடற்துறையில் இராணுவம் கைவிட்டுச் சென்ற தடயங்கள் சுமார் நாலரை மைல் தூர நிலப் பகுதியில் காணப்பட்டது. அங்கு நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டதால் பெரும் அச்சத்துடனேயே— புலிகள் பிரதிநிதிகளுடன் — அப்பகுதிக்குச் சென்றோம்.

செக்கோஸ்லோவாக்கியாவிலிருந்து தருவிக்கப்பட்ட இரு யுத்த டாங்கிகள் வெடிகுண்டால் வீசப்பட்டு முற்றாக சேதமடைந்து அழிவுற்றுக் காணப்பட்டன. வேறொரு வாகனமும் ரோவர் வாகனம் ஒன்றும் அழிந்து கிடந்தன. அவ்விடத்தில் பிணவாடை வீசியதால் அந்த ரோவர் வாகனம் அதில் வந்த சிப்பாய்களுடன் சேர்ந்து அழிக்கப்பட்டிருக்கலாம் என ஊகித்தோம்.

படையினர் தங்குவதற்காக அமைக்கப்பட்ட மணற்சாக்குகள், சிறிய பதுங்கு குழிகள் ஆகியவற்றைக் கண்டோம்.

அரிசி ஆலை ஒன்று, நெற்குதம் ஒன்று, வெங்காயக் களஞ்சியம் ஆகியன எரிந்து கிடந்தன. பொது மக்களின் பல வீடுகள் நாசமாக்கப்பட்டிருந்தன.

நாங்கள் கிளாலிப் பகுதியைப் பார்வையிடும் போது, நிலக்கண்ணி வெடித்து கால்களை இழந்த நிலையில் இருவர் எடுத்துச் செல்வதைக் கண்டோம்.

### இராணுவத்தை நம்பவில்லை

வடக்கில் உள்ள மக்கள் எவரும் இராணுவம் தமக்கு மீட்சி தரும் என்று நம்பவில்லை. பொதுவாக இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முன்றால் இரத்தக்களரி ஏற்படும் என அங்குள்ளவர்கள் நம்புகின்றனர்; அப்படி இராணுவம் வந்தால் தங்கள் பிள்ளைகளைக் கொன்றொழிக்கும் என்றே அவர்கள் கருதுகின்றனர்.

விடுதலைப் புலிகளிடமே தமக்கு சுதந்திரம் உண்டு என அவர்கள் கருதுகிறார்கள். நான் சந்தித்த எவருமே இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதை விரும்பவில்லை.

அவர்கள் தமக்குரிமையான பிரதேசத்தில் இலங்கையுடன் சமாதானமாகவே வாழ விரும்புகின்றனர்.

நாங்கள் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடனும், புலிகளின் மற்றைய பிரமுகர்களுடனும் உரையாடினோம்.

அவர்கள் நியாயமான அரசியல் தீர்வு தேவை என்பதை வலியுறுத்தினர். அரசின் சமஷ்டி யோசனையின் சாரமே அதுவாகும்.

கூடிய உரிமைகளும், அதிகாரங்களும் கொண்ட சமஷ்டி முறையையே அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பு உண்டு. முதலில் யுத்தம் நிறுத்தப்படவேண்டும். அதை விடுத்து தமிழர் கழுத்தை நெரித்தவாறு சமாதானப் பேச்சுக்கு அழைத்தால் தாங்கள் வரமுடியாது என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

முதலில் கழுத்தை நெரிப்பதைக் கைவிடவேண்டும். அதன் பின்னர் பேசலாம். பேச்சு இணக்கம் ஏற்பட்ட பின்னர் ஆயுதங்களைக் கீழே வைக்கலாம் —என்பதே அவர்களின் கருத்தாகும்.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமது அரசியல் இலாபத்திற்காக தம்மை ஏமாற்றிவிடுவார்கள் என்ற பலத்த சந்தேகம் அவர்களிடம் காணப்படுகிறது.

அனைத்து அரசியல் கட்சிகளையும் அவர்கள் சந்தேகிக்கின்றனர்.

அவர்கள் தென்னிலங்கைச் சிங்கள மக்களுக்கு — பொது மக்களுக்கு — எதிரானவர்கள் அல்லர். தமிழரின் உரிமைக்காகவே அவர்கள் போராடுகின்றனர்.

சிங்கள மக்களுக்கு எதிராக அவர்கள் போராடவில்லை. தமிழரின் பிரதேசத்துக்கு வந்து, தமிழ் மக்களைத் துன்புறுத்தி, தமிழ் பிரதேசத்தில் குண்டுகளை வீசும் பாதுகாப்புப் படையினருக்கு எதிராகவே அவர்கள் போராடுகின்றனர்.

ஜனாதிபதி விஜேதுங்கவையோ, ஐ.தே.கவையோ அல்லது ஸ்ரீ.ல.சு.கவையோ அவர்கள் நம்பவில்லை.

—என்று அந்தச் செய்தியாளர் தெரிவித்தார். (உ-6)

## ஹெலியிலிருந்து துண்டுப் பிரசுரம்

யாழ்ப்பாணம், நவ. 1

யாழ்ப்பாணப் பகுதியில் நேற்றுக் காலை 11 மணிக்கு சற்றுப் பின்னர் கரையோரப் பகுதியை உள்ளடக்கி வட்டமிட்ட ஹெலிகொப்டர் ஒன்று துண்டுப் பிரசுரங்களை வீசிச் சென்றது. (உ-15-51)

## குழமுனையில் ஷெல்லினால் மூவர் காயம்

யாழ்ப்பாணம், நவ. 1

[illegible] பகுதி முகாமிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய ஷெல் வீச்சில் மூன்று பொதுமக்கள் காயமடைந்தனர்.

குழமுனை, செம்மனைப் பகுதிகளிலேயே ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன. குழமுனையில் விழுந்த ஷெல்லுக்கே மூவர் காயமடைந்தனர். (ஓ)

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், நவ. 1

மட்டக்களப்பு மாவட்டம் கோவில் போரதீவு— முனைத்தீவுப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதில், போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரவேங்கை சதானந்தன் (செல்லநாயகம் பாஸ்கரமணி — பெரியபோரதீவு) என்பவரே வீரச்சாவடைந்தவராவார். (ஓ)

## சிப்பாய் பலி

கொழும்பு, நவ. 1

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாயில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். இன்னொரு சிப்பாய் படுகாயமடைந்தார் என்று அறிவிக்கப்படுகிறது. (ஓ-எ)

## இராணுவச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று கொழும்புப் பத்திரிகைகள் கடுமையாக விமர்சனம் செய்ததும் —

அதனால் இராணுவம் சீற்றமடைந்து, இராணுவச் செய்திகளைத் தணிக்கை செய்ய வேண்டும் என்று கோரிக்கை விட்டதும் தெரிந்ததே.

## புத்தூரில்...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னுத்துரை குணசேகரம் (வயது 58) என்பவரே உயிரிழந்தவராவார்.

தனது மோட்டார் சைக்கிளை விற்றுவிட்டு பணத்துடன் அவர் ஒழுங்கையில் வீடு திரும்பியபோது இரவுவேளை வீதியில் வைத்து ஒருகோஷ்டியால் அவர் கடுமையாகத் தாக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இத்தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் கருதப்படும் கோஷ்டியைச் சேர்ந்த சிலரை காவல் துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

கைதானவர்களில் அநேகர் அகதிகள் முகாம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்தது.

இந்நிலையில் —

தாக்கப்பட்டவர் உயிரிழந்ததை அடுத்து அவரது சடலம் நேற்று அவரது வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவருக்கு சார்பானவர்கள் எனக் கருதப்படும் ஒரு கோஷ்டியினர் திரண்டு மேற்படி அகதி முகாம் பகுதிக்குச் சென்ற போது அப்பகுதியில் கலவரச் சூழ்நிலை ஏற்பட்டதாகவும் —

சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட காவலர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது ஒருவர் உயிரிழந்ததாகவும் தெரியவந்தது.

நேற்று மாலை நடைபெற்ற இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில்— முதலில் உயிரிழந்தவரின் உறவினரான— மயில்வாகனம் சிவதேசிகன் (வயது 33) என்பவர் உயிரிழந்தார்.

இவரின் சடலம் நேற்று மாலை யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (உ-15)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் சென். ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்தில் நடத்திவரும் கடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி:- [illegible] கோல்ஸ் அணி எதிர் ஜொனியன்ஸ் சிறப்பு அணி.

★ 4.30 மணி:- யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் அணி எதிர் பற்றிஷியன்ஸ் பச்சை அணி. (உ-20)

o o o

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு விழா தொடர்பாக நடத்தப்படும் பூப்பந்துச் சுற்றுப் போட்டியில் — மருதனார்மடம், பண்டத்தரிப்பு கோட்ட மாணவர்களுக்கான — ஆட்டங்கள் இன்று காலை 8 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரி உள்ளரங்கு ஆடுகளத்தில் நடைபெறும்.

o o o

யாழ். கல்வித் திணைக்களம் 15 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தி வரும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில்— இன்று பிற்பகல் 3.30 மணி முதல் நடைபெறும் மாவட்ட நிலை ஆட்டங்களில்— பங்குபற்றும் பாடசாலை அணிகள் வருமாறு:-

யாழ். இந்துவில்

★ உரும்பராய் இந்து எதிர் புங்குடுதீவு ம.ம.வி.

★ இளவாலை ம.வி. எதிர் [illegible].

நெல்லியடி ம.ம.வியில்

★ யூனியன் எதிர் தேவரையாளி இந்து.

★ [illegible] ம.ம.வி. எதிர் உடுப்பிட்டி அ.மி.க.

மட்டுவில் ம.வியில்

★ மட்டுவில் ம.வி. எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன்.

★ சாவகச்சேரி இந்து எதிர் சென் ஜேம்ஸ் ம.வி.

★ சண்டிலிப்பாய் இந்து எதிர் புங்குடுதீவு சண்முகானந்தா.

கொக்குவில் இந்துவில்

★ யாழ் இந்து எதிர் சென் ஹென்றிஸ் ம.வி.

★ சென். ஜோசப் ம.வி. எதிர் [illegible] வித்தியாலயம்.

வீட்டிலே தோட்டம் செய்தால்
நாட்டிலே பசிதீரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

